# "போர் இடப்பெயர்வுகளின் பின்பு கிராம மட்டங்களில் கூத்துக்களின் வலுவான இருப்பின் காரணங்களும் எதிர் கொள்ளும் சவால்களும்"

LIBRARY
16 AUG 2012
Eastern University, Sri Lanka.

## யாழ்ப்பாணம் வலிகாமம்மேற்கு பெரியபுலோ கிராமத்தின் வடமோடிக் கூத்துப்பாரம்பரியம் ஒரு ஆய்வு

செல்வன் அருமைத்துரை கிருபாகரன்

பதிவு இலக்கம் - Eu/ Is/ 2004/ Ac/ 149

சுட்டெண் - CS 2459

FAC55
Project Report
Library - EUSL

நுண்கலைத்துறை

கலைகலாசார பீடம்

கிழக்குப்பல்கலைக்கழகம்

இலங்கை

2011

PROCESSED
Main Library, EUSL

55

# முகவுரை

இலங்கைத் தமிழர்களது பண்பாட்டு அடையாளங்களில் மிக முக்கியமான ஒன்றாக எமது கூத்துக்கள் காணப்படுகின்றன. அந்தவகையில் தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசங்கள் எங்கும் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. தமிழர்களது பண்பாடுகளை வெளிப்படுத்துவதாகவும், சமூகங்களின் ஒன்றிணைந்த செயற்பாடாகவும் மனிதரின் உளப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் கலையாகவும் இப் பாரம்பரிய கூத்துக்கள் செயற்பட்டு வருகின்றன.

அந்த வகையில் தமிழர்களின் பாரம்பரியமான உடைகள், ஒப்பனைகள், ஐதீகங்கள், திருமண முறைகள், போர் தர்மங்கள் போன்றவற்றினையும் இக்கூத்துக்கள் கொண்டுள்ளன. எமது சமூகத்தில் பலருக்கும் களரியில் ஏறுவதற்கும், நடிப்பதற்கும், மக்களிடம் பாராட்டுப் பெறுவதற்கும் ஆசைகள் உண்டு. ஆனால் அதை வெளிப்படுத்தாது அடக்கி வைக்கின்றோம். இவ்வுணர்வானது கூத்தினூடாக தீர்த்து வைக்கப்படுகின்றது.

அத்தோடு கூத்து என்பது வெறுமனே ஆடல்களையும், பாடல்களையும் கொண்ட கலை அல்ல, கூத்து ஆடுகின்றவர்களுக்கு மட்டும் உரியதே அல்ல. அக்கூத்து ஆடுகின்ற சமூகத்தினரின் கூட்டு முயற்சி. கூத்து சமூதாய அரங்கச் செயற்பாடாக காணப்படுவதனால் அந்த சமூகமே இணைந்து செயற்படும். கூத்தினை பார்த்து விட்டு அதில் ஆடுதல் அல்லது பாடுதல் மட்டுந்தான் என கருதுவோர் சிலர் உண்டு. அதற்கு பின்னால் அக்கூத்து பழகி அரங்கேறும் வரை உள்ள உழைப்புக்களை கண்டுகொள்வதில்லை. எனவே கூத்து என்பது ஒரு கூட்டு முயற்சியின் உருவாக்கமாகும்.

அடுத்து அருகிப்போனது அல்லது அழிந்து போகின்றது எனும் கருத்து படித்த சமூகத்தினரிடம் இன்றும் இருந்து வருகின்றது. இருப்பினும் கூத்தினை அருகிப்போகின்றது எனக் கருதுவோர் கூத்துகளை நகரத்தில் தேடுகின்றனர். அவர்கள் கிராமங்களுக்குச் சென்று பார்ப்பதில்லை, அத்தோடு நகரிலுள்ள நவீன நாடகங்களுடன் ஒப்பிட்டு கூத்து அழிந்து விட்டது எனக் கூறுவோரும் உண்டு.

உதாரணமாக யாழ்ப்பாணத்தில் திருமறைக்கலாமன்றத்தினரிடையே வடமோடி தென்மோடிக் கூத்துக்கள் காணப்படுகின்றன என்ற கருத்து இருந்து வந்தது.

பின்னர் சி. ஜெயசங்கர் அவர்கள் வட்டுக்கோட்டைக் கூத்துக்கள் தொடர்பாக செய்த ஆய்வுகளின் ஊடாக வெளிக்கொணர்ந்ததைத் தொடர்ந்து வட்டுக்கோட்டை கூத்துக்களையும் பேசும்சூழல் வந்தது. இதன் பின்னர் நாடக அரங்க நூல்களில் திருமறைக்கலாமன்றத்துடன் வட்டுக்கோட்டை பாரம்பரியமும் இணைந்து கொண்டது. ஆனால் யாழ்ப்பாணத்தில் வேறு எங்கு கூத்துக்கள் உள்ளன என்பதை தேடாமல் இருப்பதை வைத்துக் கொண்டு முடிவு எடுப்பவர்களாகவே அதிகப்பேர் உள்ளனர். ஆனால் யாழ்ப்பாண கிராமங்கள் பலவற்றிலும் இக்கூத்துக்கள் பாரம்பரியமாக ஆடப்பட்டு வருகின்றன. உதாரணமாக சுழிபுரத்தின் பல பகுதிகளிலும் வடமோடிக் கூத்துக்கள் பாரம்பரியமாக ஆடப்பட்டு வருகின்றன. எனவே கூத்துக்கள் அறியப்படா நிலையில் கிராமம் தோறும் வாழ்ந்து வருகின்றன. ஈழத்து தமிழர் கூத்துப் பாரம்பரியத்தில் "மீளுருவாக்கம்" என்ற பதத்தை முதன்முதலில் 2000ம் ஆண்டுகளில் சி.ஜெயசங்கர் அவர்களே பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாக உள்ளது.

அடுத்து கூத்துக்கள் இளைய தலைமுறைகள் மத்தியில் பரீட்சயமில்லாத சூழல் காணப்பட்டுள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ள போதும், இடப்பெயர்வுகளால் இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு கூத்தில் பரிச்சயம் இல்லாது போனது. அவர்கள் தொடர்ந்து கூத்தினை பார்ப்பதற்கும் அதில் ஈடுபடுவதற்குமான களம் அமையவில்லை. அத்தோடு சினிமா, தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றுடன் பழக்கப்பட்ட இளைய தலைமுறையினர் அதில் அதிகம் நாட்டம் காட்டுகின்றனர். எனவே அதனுடைய போலித்தன்மைகளையும் கூத்தினுடைய முக்கித்துவத்தையும் உணரவைக்க வேண்டியது நாடகமும் அரங்கியலும் பாடத்தை படிக்கின்ற, இத்துறையில் ஈடுபடுகின்றவர்களின் கடமையாகும்.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் கூத்தினை ஆடிவரும் பெரியபுலோ கிராமத்தின் கூத்துப்பாரம்பரியத்தை வெளிக்கொணர்ந்து, இக்கூத்துக்களின் தொடர்ச்சிக்குரிய ஆக்கபூர்வமான காரியங்களைச் செய்யும் நோக்கில் இவ்வாய்வு நிகழ்த்தப்படுகின்றது.

# பொருளடக்கம்

1 நன்றியுரை

2 உறுதியுரை

3 முகவுரை

4 ஆய்வுத்தலைப்பு

5 ஆய்வுக்கான காரணங்கள்

6 ஆய்வுப்பரப்பு

7 தரவுசேகரிக்கும் முறை

8 பகுப்பாய்வு

9 வரைபடம்

## அத்தியாயம் 01

01) சுழிபுரம்மேற்கு பெரியபுலோ கிராமத்தின் புவியியல், தரைத்தோற்ற அமைப்பும் அதன் சிறப்பியல்புகளும் ........................................................1-9

உசாத்துணைகள்........................................................................10

## அத்தியாயம் 02

02) பெரியபுலோ கிராமத்தின் சமூகவரலாற்றுப்பின்புலம் ........................11-31

2.1. சமூகக்கட்டமைப்பு

2.2. தொழில்முறையும் வாழ்க்கையும்

2.3. தமிழ்ப்பண்பாடும் சமயவழிபாடுகளும்

2.4. கலைகளின் இருப்பும் இயக்கமும்

உசாத்துணைகள். .......................................................................32

## அத்தியாயம் 03

03) பெரியபுலோக் கிராமத்தில் ஆடப்பெற்று வருகின்ற வடமோடிக்கூத்துக்களும், ஆற்றுகை முறைகளும் ....................................................................33-64

3.1. வடமோடிக் கூத்தின் அறிமுகம்.

3.2. வடமோடிக்கூத்தின் கதையமைப்புக்கள்.

3.2.1. தர்மபுத்திரர் நாடகம்.

3.2.2. பப்பிரவாகன் கூத்து.

3.2.3. இராம நாடகம்.

3.2.4. விராடநாடகம்.

3.3 கூத்துப் பழகும் முறைகள்.

3.4. கூத்தின் ஆற்றுகை முறையும் சமூகமும்.

3.5. வட்டக்களரி அமைப்பு முறை.

3.6. பாரம்பரிய அரங்கக்கூறுகள் தொழில்முறையாக இயங்குவதற்கான சாத்தியப்பாடுகள்.

உசாத்துணைகள்........................................................65

## அத்தியாயம் 04

04) கூத்து ஆற்றுகைகளின் போது இவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் அதை நிவர்த்தி செய்வதற்கான தீர்வுகளும் ..........................................63 - 72

4.1. அண்ணாவிமாரின்மையும் அதனால் ஏற்படும் பொருளாதார பிரச்சினைகளும்

4.2. சினிமாவின் தாக்கம்.

4.3. இளைய தலைமுறையினரின் தொடர்புகள் விடுபட்டிருத்தல்

4.4. படச்சட்ட மேடைக்கு கூத்தை கொண்டு செல்வது.

உசாத்துணைகள் ..................................................73

முடிவுரை ..................................................74-75

பின்னிணைப்புக்கள்..................................................76-85